**தலைப்பு 5 – அமைச்சரவை அலுவலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அமைச்சரவை அலுவலகத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க அமைச்சரவை அலுவலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பறிக்கை 2021 யூன் 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சரவை அலுவலகத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, இந்நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அலுவலகத்தின் நிதி நிலைமையினையும் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியினால் குறிப்பிடப்பட்டுள்ள விடயத்தின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்பட்டுள்ளது இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சரவை அலுவலகத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சரவை அலுவலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- அலுவலகத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்புகள் மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமானதாகவும் நியாயமாகவும் உள்ளடங்கியுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்துடன் இணங்கியதாகவும்,

(ஆ) கடந்த வருடத்திற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன என்பது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றுநிருப ஏற்பாடுகளுடன் இணங்காமை

அரச கணக்குகள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டி 06 ஆம் இலக்கம் பிரகாரம் நிதிக்கூற்றுக்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டிய போதிலும் அந்த தேவைப்பாட்டிலிருந்து விலகிய சந்தர்ப்பமொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வழிகாட்டிக்கு முரணாக நிதிச் செயலாற்றல் கூற்றில் முற்பணங்களின் பெறுவனவுகள் மற்றும் கொடுப்பனவுகள் ரூபா 185,600 திறைசேரி புத்தகங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள தொகைகளை விட மிகவும் குறைவாக காட்டப்பட்டிருந்தது. | கணக்காய்வுடன் இணங்குகின்றேன். கணக்காய்வு வேறுபாட்டிற்கு காரணமாக இருந்தது 240 ஆம் இலக்க தலைப்பின் மூலம் 2020 திசெம்பர் மாத இறுதி கணக்குகளின் பொழிப்பின் மூலம் இந்த தலைப்பிற்கு பிழையாக மேற்கொள்ளப்பட்ட வரவு மற்றும் செலவு குறிப்புக்கள் என்பதுடன் அந்த பிழையை சரி செய்யும் | வழிகாட்டியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்கள் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | குறிப்புக்கள் நிதிக்கூற்றுக்களை ஒழுங்குபடுத்தும் போது கவனத்திற்கு கொள்ளாமையாகும். | |

### 1.6.2 நிதிச் செயலாற்றல் கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| செலவுப் பேரேட்டின் பிரகாரம் ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டுச் செலவுகள் ரூபா 113,239,219 ஆக இருந்த போதும் திறைசேரி குறிப்பின் பிரகாரம் அது ரூபா 116,640,236 ஆக இருப்பதனால் வேறுபாடு ரூபா 3,401,017 ஆகும். | கணக்காய்வுடன் இணங்குகின்றேன். இறுதி திறைசேரி அச்சுப் பதிவின் பிரகாரம் ஆளணி வேதனங்களின் சரியான பெறுமதி ரூபா 116,640,236 ஆக இருந்த போதிலும் அலுவலகத்தின் செலவு பேரேடுகளில் உள்ளடக்கப்படாததனால் இந்த வேறுபாடு ஏற்பட்டுள்ளதாக | நிதிக்கூற்றுக்களில் சரியாக தகவல்கள் உள்ளடக்கப்படல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் 02 வருடங்களை விஞ்சிய ரூபா 70,150 டெண்டர் வைப்பை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | கணக்காய்வுடன் இணங்குகின்றேன். பண வைப்பின் பற்றுச்சீட்டை சமர்ப்பித்து இந்த வைப்புப் பணத்தை மீண்டும் பெற்றுக் கொள்ளுமாறு பல தடவைகள் உரிய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. நாட்டில் காணப்பட்ட மற்றும் காணப்படுகின்ற தொற்று நிலமையினால் நிறுவன நடவடிக்கைகள் முன்னரைப் போல் இடம்பெறாத காரணத்தினால் அந்த வைப்பு பணத்தை மீண்டும் பெற்றுக் கொள்வதற்கு மேலும் காலம் தருமாறு அந்த நிறுவனத்தால் அறிவிக்கப்பட்டதுடன் அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளவில்லை என்பதாக | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயல் நடவடிக்கைத் திட்டம்

#### 3.1.1 செயல்நடவடிக்கைத் திட்டத்தை ஒழுங்குபடுத்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்கமுடைய அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 3 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டில் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுடன் இணங்குகின்றேன். 2020 ஆம் ஆண்டிற்கான நிரந்தர பாதீட்டு பதிவேடொன்று இந்த வருடத்தின் இறுதிர்ாகுதியிலே முன்வைக்கப்பட்டதுடன் அடிக்கடி சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அங்கீகரிக்கப்பட்ட கணக்குகளின் ஊடாக ஏற்பாடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டதனால் செயல் நடவடிக்கைத் திட்டமொன்றை ஒழுங்குபடுத்தி சமர்ப்பிப்பதற்கு முடியாது போனது என்பதாக | சுற்று நிருபத்தின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.2 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 ஆம் இலக்கமுடைய அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 04 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டிக்கான பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வுடன் இணங்குகின்றேன். 2020 ஆம் ஆண்டிற்கான நிரந்தர பாதீட்டு பதிவேடொன்று இந்த வருடத்தின் இறுதிர்ாகுதியிலே முன்வைக்கப்பட்டதுடன் அடிக்கடி சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால அங்கீகரிக்கப்பட்ட கணக்குகளின் ஊடாக ஏற்பாடுகள் பெற்றுக் கொடுக்கப்பட்டதனால் பெறுகைத் திட்டமொன்று தயாரிப்பது பிரச்சினைக்குரியதாகக் காணப்பட்டது. | சுற்று நிருபத்தின் பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2016 மார்ச் 31 ஆந் திகதிய 05/2016 ஆம் இலக்கமுடைய அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் பொருட்கள் | கணக்காய்வுடன் இணங்குகின்றேன். 2020 ஆம் ஆண்டிற்குரிய பொருட்கள் மெய்மையாய்வை நடாத்துவதற்காக 2019 திசெம்பர் 13 ஆந் திகதி பொருட்கள் | வருடாந்த பொருட்கள் மெய்மையாய்வை நிறைவு செய்து அந்த |

| | | |
|---|---|---|
| மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்வு தலைமை அதிபதிக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | மெய்மையாய்வு சபை தாபிக்கப்பட்டிருந்தது. ஏதிர்பார்த்த தினத்தில் உரிய இறுதி அறிக்கையை தயாரிப்பதற்கு முடியாதிருந்தது. | அறிக்கையின் பிரதியொன்றை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 118 ஆகவும் மற்றும் உள்ளபடியான பதவியணியினர் 83 ஆகவும் வெற்றிடங்கள் 35 ஆகவும் காணப்பட்டதுடன் சிரேஷ்ட மட்ட II வெற்றிடங்கள் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது. அத்தோடு மொத்த பதவியணியினரில் நூற்றுக்கு 30 அளவிலான வெற்றிடங்கள் நிலவியது. | கணக்காய்வுடன் இணங்குகின்றேன். | மிகவும் தேவையான பதவிக்கான வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |